**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2021

ஆண்டு: 4 திகதி: 20.11.2021

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்: திருமதி. நி. இரவீந்திரராஜா
திருமதி. ம. விஜயகுமார்

மாணவர் பெயர்: ______________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 10 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 20 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 10 | |
| வினா 7 | 15 | |
| வினா 8 | 15 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 10 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**சரியானவற்றை தொடர்புபடுத்துக**

| | | |
|---|---|---|
| 1. | சூரியனின் ஒளிக்கதிர்கள் | டார்லிங் துறைமுகத்தில் உள்ளது |
| 2. | தமிழரின் பாரம்பரிய நாடுகள் | விவசாயக் கண்காட்சி நடைபெறும் |
| 3. | வட ஆஸ்திரேலியாவில் | தமிழ்நாடும், ஈழமும் ஆகும் |
| 4. | சிட்னியில் நீர்வாழ் உயிரினக் காட்சிசாலை | கீழ்வானிலே தாவின |
| 5. | ஈஸ்டர் விடுமுறையில் | ஆதிவாசிகள் வசிக்கிறார்கள் |

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**2.1 பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொல் தருக.**

1. சூரியன் = ______________________________
2. மகிழ்ச்சி = ______________________________
3. அழகு = ______________________________
4. மலர் = ______________________________
5. நேரம் = ______________________________

**2.2 பின்வருவனவற்றிற்கு எதிர்ச்சொல் தருக.**

1. சரியான = ______________________________

2. இன்பம் = ______________________________

3. இரவு = ______________________________

4. ஏழை = ______________________________

5. ஒருமை = ______________________________

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களை பிரித்து எழுதுக**

1. கவியரங்கம் = ______________________________

2. கருநாகம் = ______________________________

3. சாலையோரம் = ______________________________

4. குருவிக்கூடு = ______________________________

5. ஆற்றங்கரை = ______________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் உரைப்பகுதியைக் கவனமாக வாசித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

மரங்கள் அடர்ந்த ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டின் இடையே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றங்கரையில் ஒரு பெரிய அரசமரம் நின்றது. ஆற்றிலிருந்து தொலைவில் நின்ற மரங்களுக்கெல்லாம் மழை பெய்யும்போதுதான் ஏராளமான நீர் கிடைக்கும். மற்றைய காலங்களில் அவை தரையில் மிக ஆழத்திற்குத் தங்கள் வேரை நீட்டி, அங்குள்ள ஈரத்தைத்தான் இழுத்துக்கொள்ள வேண்டும்.

ஆற்றங்கரையில் அரசமரத்திற்கோ ஆண்டு முழுவதும் தண்ணீருக்குக் குறைவில்லை. வண்டல் கலந்து வந்த நீர் அரசமரத்திற்கு வலிவையும் பொலிவையும் கொடுத்தது. அரசமரம் அகன்று பெருத்து வானுறவோங்கித் தலைநிமிர்ந்து பூரிப்பாக நின்றது.

அரசமரம் மற்றைய மரங்களைப் பார்த்து "நான் உங்கெளுக்கெல்லாம் தலைவன்!" என்று கூறியது.

மற்றைய மரங்கள் பேசாதிருந்தன. ஆற்றின் வளத்தால் அதிக நலம் பெற்ற அரசமரம் அகங்காரத்தோடு பேசுவதை அவற்றால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏற்றுக் கொள்ளாமலும் இருக்க முடியவில்லை. ஆகவேதான் அவை பேசாமல் நின்றன.

ஒருநாள் எங்கோ தொலைவில் உள்ள ஒரு மலையில் மழை பொழிந்தது. தொடர்ந்து பெருமழை பெய்தபடியால் ஆறு பெருக்கெடுத்தது. வெள்ளம் பெருகி ஓடி வரும் ஆறு, தன் வேகத்தால் வழி நெடுகிலும் கரையை அரித்துக்கொண்டே வந்தது. அரசமரம் இருந்த இடமும் அரிப்பெடுத்துக் கரைந்துவிட்டது. மண் கரையக் கரைய அரசமரத்தால் வேரூன்றி நிற்க முடியவில்லை. அப்படியே ஆற்றுக்குள் சாய்ந்தது. வெள்ளம் அரசமரத்தையும் அடித்துக்கொண்டு சென்றுவிட்டது.

"ஆற்றங்கரை வாழ்வு அவ்வளவுதான்!" என்று சொல்லி மற்றைய மரங்கள் அரசமரத்திற்காக பரிதாபப்பட்டன.

1. ஆற்றங்கரையில் இருந்த மரம் எது?

2. எவ்வாறான நீர் அரசமரத்திற்கு வலிவையும், பொலிவையும் கொடுத்தது?

3. அரசமரம் அகங்காரத்தோடு என்ன கூறியது?

4. ஏன் அரசமரத்தால் வேரூன்றி நிற்க முடியவில்லை?

5. இக்கட்டுரைக்கு பொருத்தமான தலைப்பு ஒன்று தருக?

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**காலம் தொடர்பான அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1. | படித்தேன் | | |
| 2. | | | பாடுவாள் |
| 3. | நடந்தான் | | |
| 4. | | அழுகின்றான் | |
| 5. | | | எடுப்பாள் |

| வினா இல | 6 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வசனம் அமைக.**

1. மட்டுமே / பறக்க / இறக்கைகள் / முடியும் / இருந்தால்

   ______________________________

2. பாடத்தை / மாணவர்கள் / தமிழ் / கற்றனர் / ஆர்வத்துடன்

   ______________________________

3. பெறுவதற்கு / அவசியம் / காடுகள் / மழையை

   ______________________________

4. இரை / சென்றது / தாய்ப்பறவை / வெளியே / தேடச்

   ______________________________

5. மகிழ்ச்சி / பாடசாலைக்கு / ஆகும் / கோவிட்-19ன் / முடிந்து / செல்வது / எல்லோருக்கும்

   ______________________________

   ______________________________

| வினா இல | 7 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி அயல் நாட்டில் வசிக்கும் உறவினருக்கு அல்லது நண்பருக்கு 60 சொற்களுக்கு குறையாமல் கடிதம் ஒன்றை எழுதுக.**

1. உமது பிறந்தநாள் கொண்டாட்டம்

2. ‘இயங்கலை (Online) மூலமாக கல்விகற்றல்’

3. ‘தமிழ் பாடசாலையில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் வெற்றிபெற்றமை’ பற்றி….

4. நீங்கள் கொண்டாடிய தைப்பொங்கல்

| வினா இல | 8 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 60 சொற்களில் கட்டுரை ஒன்று எழுதுக.**

1. தமிழ் வளர்த்த பெரியார் / பிரபலமான தமிழர்
2. தந்தையர் தினம்
3. அவுஸ்திரேலியாவின் பருவகாலங்கள்
4. எனக்கு பிடித்த நாடு அவுஸ்திரேலியா